**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 07.04.2026**

**OS.240/2023**

**வா.சா.2 திரு.ராஜேஸ்**

**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் அரூரில் குடியிருந்து வருகிறேன். நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ராஜேந்திரனுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ராஜேந்திரன் எனது உறவினர் என்றால் உறவினர் இல்லை, எனது அப்பாவின் நண்பர். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் முன்பு டிபார்ட்மெண்ட் ஸ்டோர் வைத்திருந்தேன் தற்போது விவாசயம் மற்றும் வியாபாரம் செய்து வருகிறேன். டிபார்ட்மெண்ட் ஸ்டோர் வைத்திருந்தபோது நானும், எனது நண்பர் சுரேஷ் மற்றும் சில நண்பர் சேர்ந்து அரூர் திரு.வி.க நகரில் வெற்றி விநாயகா நிதிநிறுவனம் நடத்தினோம் என்றால் சரிதான். ராஜேந்திரன் என்ன தொழில் செய்கிறார் என்றால் விவசாயம். அவருக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 5 ஏக்கர் இருக்கும். ராஜேந்திரனுக்கு விவசாயத்தை தவிர வேறு வட்டி தொழில் உள்ளதா என்றால் இல்லை. அவருக்கு விவசாயத்தில் எவ்வளவு ஆண்டு வருமானம் வரும் என்றால் அது எனக்கு தெரியாது.

2. ராஜேந்திரனின் சொந்த ஊர் எது என்றால் எலவடை. இவ்வழக்கின் பிரதிவாதி எந்த ஊர் என்றால் அரூரில்தான் குடியிருந்து ஆசிரியராக வேலை

பார்த்தார் அவரின் சொந்த ஊர் பற்றி தெரியவில்லை. வாதிக்கும், பிரதிவாதிக்கும் எந்த வகையில் பழக்கம் என்றால் நான் டிபார்ட்மெண்ட்ஸ்டோர் வைத்திருந்ததால் அந்த கடைக்கு வரபோக பழக்கம். பிரதிவாதி நேரடியாக வாதியிடம் கடன் கேட்டாரா அல்லது என்மூலமாக கடன் கேட்டாரா என்றால் என்மூலமாகதான் கடன் கேட்டார். பிரதிவாதி என்ன தேவைக்காக பணம் கேட்டார் என்றால் அவருடைய அவசர தேவைக்கு பணம் வேண்டும் என்று கேட்டார். நான் என்ன சொன்னேன் என்றால் நான் ராஜேந்திரனிடம் கேட்டுவிட்டு சொல்வதாக சொன்னேன். ராஜேந்திரன் பிரதிவாதிக்கு பணம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டாரா என்றால் இங்கு கூட்டிவாருங்கள் பணம் கொடுக்கிதறேன் என்று சொன்னார். நான் பிரதிவாதியை கூட்டிச்சென்றேனா என்றால் ஆமாம். நாங்கள் இருவரும் ஒரே வாகனத்தில் சென்றோமா என்றால் ஆமாம். நாங்கள் இருவரும் எலவடைக்கு எந்த நேரத்தில் சென்றோம் என்றால் மதியம் 2 மணி இருக்கும். போனவுடன் ராஜேந்திரன் பணம் கொடுத்தாரா என்றால் போனவுடன் கொடுக்கவில்லை, புரோநோட் எழுதி கொடுத்தபிறகுதான் பணம் கொடுத்தார். அது எந்த தேதி என்றால் 25.10.2020–ம் தேதி.

3. அந்த புரோநோட்டை பிரதிவாதியே அவர் கையால் எழுதினாரா என்றால் நான்தான் அந்த புரோநோட்டை எழுதினேன். என்னை தவிர வேறு யார் அங்கு இருந்தது என்றால் ராஜேந்திரன் மனைவி இருந்தார். அந்த புரோநோட்டில் வேறுயாரவது சாட்சியாக கையொப்பம் செய்தார்களா என்றால் நான் தான் சாட்சி கையெழுத்து செய்தேன். அந்த புரோநோட்டில் நான் தான்

எழுதியவர் என்பதற்காகவும், சாட்சி என்பதற்காகவும் போட்டேன் என்றால் சரிதான் (சாட்சி தற்போது சரியாக நினைவில்லை என்று கூறுகிறார்). நான் நிதிநிறுவனம் நடத்தி வந்த காலத்தில் ஈட்டியம்பட்டியை சேர்ந்த சக்திவேல் என்பவர் என்னிடம் பணம் கேட்டு வந்தாரா என்றால் இல்லை. மேற்படி சக்திவேலை எனக்கு தெரியுமா என்றால் யார் என்றே தெரியவில்லை.

4. நாங்கள் நடத்தி வந்த நிதிநிறுவனத்தை கலைத்து விட்டோம் என்றால் சரிதான். நான் நிதிநிறுவனம் நடத்திவந்த காலகட்டத்தில் சக்திவேல் என்னிடம் ரூபாய் 2 இலட்சம் கடன் வாங்கினார் அப்போது இந்த வழக்கின் பிரதிவாதியான அரங்கண்ணல் என்பவரும் உடன் வந்தார் என்றால் அப்படி எதுவும் நடக்கவில்லை. சக்திவேல் என்பவர் திரு.வி.க நகரில் காய்கறி கடை நடத்தி வந்தார் என்றால் இல்லை. சக்திவேல் எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால்தான் நிதிநிறுவனம் மூலம் அவருக்கு கடன் கொடுத்தேன் என்றால் இல்லை. நிதிநிறுவனம் நடத்தி அதனை கலைக்கும்போது அந்த நிதிநிறுவனத்துக்கு யாராவது பணம் செலுத்தாமல் இருந்தால் அவர்களிடம் பெற்று வைத்திருந்த பூர்த்திசெய்யப்படாத பத்திரத்தை பிரித்துக்கொள்வோம் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்து வந்த பத்திரத்தை தான் என்மூலமாக வழக்கு தாக்கல் செய்யாமல் எனது நண்பர் ராஜேந்திரனை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

5. இவ்வழக்கின் பிரதிவாதிக்கு வாதி ராஜேந்திரனை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. நான் நிதிநிறுவனத்தில் இருந்து பெற்ற

பூர்த்திசெய்யப்படாத புரோநோட்டை வைத்து எனது நண்பர் மூலம் இந்த வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு கடன் வாங்கவேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல. வாதியும் அறியாத நபரான பிரதிவாதிக்கு ரூபாய் 2 இலட்சம் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால்சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆசிரியர் என்பதால் அவரிடம் ஈசியாக தொகையை வசூலித்து விடலாம் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் இருந்து எந்த தொகையும் கடனாக பெறவில்லை அதற்காக எந்த புரோநோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்தவழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.07 15:38:16 +0530